# ‘போர் எப்போது முடியும் என்று சொல்வதிற்கில்லை’

(கொழும்பு)
சண்டை எப்போது முடியும் என்று இப்போது எதுவும் சொல்வதற்கில்லை என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் வோல்டர் பெர்ணன்டோ தெரிவித்தார்.
[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 10 இதழ்: 165
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26-7-1991

## பல காவலரண்கள் முற்றாக தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு பிரதான முகாம் காவலரண்கள் மீது நேற்று நண்பகல் புலிகள் மேற்கொண்ட ரொக்கட் தாக்குதல்களில் பல காவலரண்கள் முற்றாக தகர்க்கப்பட்டன.
[4ம் பக்கம் பார்க்க]

## க. பொ. த. பரீட்சை அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)
“கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை 1991க்கான அனுமதி அட்டைகள் அடுத்தமாதம் 2ம் திகதி மட்டில் அவ்வப்பகுதி கோட்ட
[4-ம் பக்கம் பார்க்க]

## ★ கட்டைக்காடு - வெற்றிலைக்கேணியில்

# பழையபடைக்குப் பதிலாக புதிய படைகள் தரையிறக்கம்

## இறுதிப் போருக்கு முஸ்தீபு

[கொழும்பு]
ஆனையிறவு முகாமை புலிகளின் முற்றுகையிலிருந்து விடுவிக்கும் முயற்சியில் கடந்த 16-ம் திகதி கட்டைக்காடு. வெற்றிலைக்கேணி பகுதிகளில் தரையிறக்கப்பட்ட சுமார் 3000 படையினரும் வெளியேற்றப்பட்டு அதற்குப் பதிலாக சுமார் 4000 படையினர் இப்பகுதிகளில் புதிதாக தரையிறக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தகவலை பாதுகாப்பு அமைச்சை ஆதாரம்காட்டி நேற்று ‘சர்வதேச செய்திகள்’ வெளியிட்டன. அச்செய்திகள் மேலும் தெரிவிக்கையில்:

புலிகளின் முற்றுகையிலிருந்து முகாமை விடுவிக்க படையினர் மேற்கொள்ளும் இறுதி முயற்சியாக இது இருக்கும். இதற்காகமுப்படைகள் தமது சகலபலத்தையும் பயன்படுத்த வுள்ளன. இதற்கென படையினருக்குத் தேவையான இராணுவ தளபாடங்களும், உணவுப் பொருட்களும் கடந்த இரு தினங்களில் இப்பகுதிக்கு வந்திறங்கியுள்ளன.

இதேவேளை அரசபடைகளின் இறுதி முயற்சியை எதிர்கொள்ள புலிகளும் தம்மைத் தயார் படுத்தியுள்ளதாகவும்
(4 ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்து செயற்பட அழைப்பு

[யாழ்ப்பாணம்]
விடுதலைப்புலிகளுடன் முழுமையாக இணைந்து செயற்பட முன்வருமாறு தமிழீழ மக்கள் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வேண்டுகோளில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட விரும்பும் அனைவரையும் அருகிலுள்ள பிரதேச காரியாலயத்துடன் உடன் தொடர்பு கொள்ளு
(4-ம் பக்கம் பார்க்க)

## அரசியல் ரீதியில் பிரச்னைக்கு தீர்வு

(கொழும்பு)
வடக்கு - கிழக்குபிரச்னைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று சுதந்திர கட்சிஉறுப்பினர் திரு. மங்கள முனசிங்க பாராளு மன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணையை ஆதரிப்பதென அமைச்சரவை ஏகமனதாக தீர்மானித்துள்ளது,

இப்பிரேரணைக்கு ஆதர
(4-ம் பக்கம் பார்க்க)

## 131 படையினர் இதுவரைபலியாம்

[கொழும்பு]
ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதியில் இடம்பெறும் யுத்தத்தில் 131 படையினர் கொல்லப்பட்டதாகவும் 350 படையினர்வரை காயமடைந்ததாகவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் வால்டர் பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்.
(4ம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் போரில் சிக்கிய சிப்பாயை நேற்றுப் பார்வையிட்டனர்

[யாழ்ப்பாணம்]
புல்லாவெளியில் கடந்த வாரம் இடம் பெற்ற மோதலில் புலிகளால் காயங்களுடன் பிடிக்கப்பட்ட ஸ்ரீலங்கா சிப்பாய் ஒருவரை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள்நேற்று பார்வையிட்டனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் இந்த சிப்பாய் ஸ்ரீலங்கா கெமுனுப் படைப் பிரிவைச் சேர்ந்த உபாலி என்று தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை வங்கி நாளை இயங்கும்

(யாழ்ப்பாணம்)
வாடிக்கையாளரின் நலன் கருதி நாளை சனிக்கிழமை சாவகச்சேரி கிளை தவிர்ந்த ஏனைய யாழ். மாவட்ட இலங்கை வங்கிக்கிளைகள் அனைத்தும் பணப் பரிவர்த்தனைக்காக காலை 9-00 மணி தொடக்கம் 10-00 மணிவரை திறந்திருக்குமென்று வங்கி நிர்வாகம் அறிவித்துள்ளது.

## கரும்புலிகளுக்கு அஞ்சும் ராஜாங்க அமைச்சு செயலர்

[கொழும்பு]
விடுதலைப்புலிகளின் ‘கரும்புலி’ தாக்குதலை நினைத்தே பெருமளவு அச்சமடையவேண்டியிருப்பதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலர் வால்டர் பெர்ணண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

கரும்புலிகள் பல முகாம்கள்
(4ம் பக்கம் பார்க்க)

## தரையிறங்கிய ‘ஹெலி’ மீது விமானங்கள் தாக்குதல்!

[யாழ்ப்பாணம்]
கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி பகுதியில் கடந்த 18ம் திகதி புலிகளின் தாக்குதல்களுக்கிலக்காகி அவசர அவசரமாக வளலாய் பகுதியில் படையினர் காவலரணுக்குஅண்மையில் தரையிறங்கிய ‘ஹெலி’ மீது நேற்று முன்தினம் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

புலிகளின் தாக்குதலில் பலத்த சேதமடைந்த இக்ஹெலி புலிகளின் கைகளில் சிக்கிவிடும் சாத்தியமிருப்பதை அடுத்தே நேற்றுமுன்தினம் நண்பகல் 11 மணியளவில் ‘ஹெலி’ நின்றபகுதியில் கடும் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
[4-ம் பக்கம் பார்க்க]

## 2 கப்பல்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்துக்கு. அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் மருந்து வகைகளையும் ஏற்றிக்கொண்டு இருகப்பல்கள் பருத்தித்
(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் இளைஞர் மீது பொலிஸார் துன்புறுத்தல்

(கொழும்பு)
கொழும்பில் விடுதிகளில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்கள் பொலிசாரினால் தொடர்ந்து துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள்.

தமிழிளைஞர்கள் தங்கியிருக்கும் விடுதிகளுக்குத் திடீர் திடீரெனச் செல்லும் பொலிசார்
[4-ம் பக்கம் பார்க்க]

## பற்பசை, சோப் வேண்டி அரசு அறிவிப்பு

(கொழும்பு)
ஆனையிறவு, கட்டைக்காடு குதிகளில் யுத்தத்திலீடுபட்டு வரும் இராணுவத்தினருக்கு வேண்டிய சோப், பற்பசை, படுக்கை விரிப்புகள், உணவுப் பண்டங்கள் போன்றவற்றை
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

யந்திரம் நல்ல நிலையிலுள்ள (B. M. C.) லொறி 26 சிறி - 28 சிறி தேவை. ந. சிற்றம்பலம், 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5018)

### வகுப்பு

Spoken English, English with Grammar and German Languages. ஆங்கிலம், ஜெர்மன் (டொச்) மொழிகள் விஷேச தனிப்பட்ட ரீதியில் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தொடர்புகொள்க: ச சொர்ணலிங்கம், இல. 4, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (K.K S வீதி, மனோகரா தியேட்டர் அருகாமையில்). ஜெர்மன் மொழி பயிலத் தொடர்புகொள்ளவேண்டிய விலாசங்கள்: German Cultural Association: 1 S. Sornalingam, 4. Gopal Lane Vannarponnai Jaffna. 2. S. B. Sabanayagam, 33, Kandy Rd., Jaffna (சி-5028)

### மீரா நூலகம்

இன விடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள். சிறுவர்களுக்கு ''இராவணன் கோட்டை'' இன்னும் நெஞ்சைத் தொடும் பத்து ''மீரா நாவல்கள்'' விற்பனையாகின்றது. தொடர்ந்து வாங்குங்கள். உங்கள் இல்லத்தில் ஒரு ''மீரா நூலகத்தை'' ஆரம்பியுங்கள். (சி-5029)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# ஆனையிறவில் 14-ம் திகதி யுத்தத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கைகள்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு முகாம் சுற்றுடலிலும், கட்டைக்காடு பகுதியில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருடனும் கடந்த 14ம்திகதி ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளின் விபரம் வருமாறு:

1. லவன் [துரைசிங்கம்-இராஜசங்கர், ஈ.எல். பெர்ணண்டோ மாவத்தை, கொழும்பு)
2. சோலை (சந்தியாப்பிள்ளை -கிறிஸ்ரி கயேந்திரன், 4-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)
3. றெஜி [பொன்னையா-பத்மநாதன், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு]
4 பாரத் [இராஜதுரை-குகதாசன், கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உடுவில், சுன்ணகம்]
5. யாதவன் (கந்தையா-கமலக்கண்ணன், 15/3, சந்தனமாதா லேன், பாண்டியன்தாழ்வு, அரியாலை]
6. குணேஸ் [செல்வராஜா-பேரின்பமோகன், செம்மணி வீதி, அரியாலை)
7. பழனி [அந்தோனிப்பிள்ளை- அருள்தாஸ், 3ம் குறுக்குத்தெரு, கடற்கரை வீதி, பருத்தித்துறை)
8. கண்ணன் [தர்மன் பிள்ளை-ஏகாம்பரம், களுவாஞ்சிக்குடி, மட்டுநகர்]
9. தவம் (அருளம்பலம்-சௌதிரராஜன், 6ம்ஒழுங்கை, கூளாவடிகாலனி, மட்டக்களப்பு)
10. நியூட்டன் (கந்தையா-தேவராஜா, முருகமூர்த்தி கோவிலடி, காரைநகர்]
11. முகுந்தன் (தியாகராசா விக்னேஸ்வரன் - வத்திரயன் வடக்கு தாளையடி)
12. லெ.மாக்கிரட் (சிற்றம்பலம் சாந்தி - உடுத்துறை தாளையடி)
13. (இராசரத்தினம் சிவரத்தினம் - நாவற்காடு, அச்சுவேலி)
14. ராஜசிங்கன் (ஆறுமுகம் திருச்செல்வம் - துறைநீலாவனை, அம்பாறை)
15. வாணவர்மன் (ராஜப்பு தேவஅருள்வாசம் குணசீலன் - சென்ஜேம்ஸ், இளவாலை)
16. அருமை (கோபாலசிங்கம் தாதுலிங்கம் - மண்டூர், தம்பலவத்த, மட்டக்களப்பு)
17. சந்திரன் சங்கரப்பிள்ளை அன்பரசன் - நவாலி வடக்கு, மானிப்பாய்)
18. ஜெகன் (கந்தசாமி சரவணபவன் – 3-ம் கட்டை, திருகோணமலை)
19. சூட்டி (சின்னத்தம்பி இராசு செல்வேந்திர - கெருடாவில், சாவகச்சேரி)
20. ஜாசிர் (கந்தசாமி (சின்னப்பொடி) சிவதாஸ்- உசன், மிருசுவில்)
21. கில் (சண்முகம் தபேந்திரன்- 70, செல்வபுரம் வடக்கு, வவுனிக்குளம்)
22. விக்னேஸ் (பாலசிங்கம் மால்முருகன் - வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை)
23. காண்டீபன் (வைரப்பிள்ளை உமாநேசன்-விக்னம் வீதி, உடுத்துறை, தாளையடி]
24. யூசி (ஆறுமுகம்பிள்ளை சிறிசுந்தரம்- ஏ. ஜி. ஏ லேன். நெடியகாடு, வல்வெட்டித்துறை)
25. லக்ஸ்மன் (கிருஷ்ணன் இராமச்சந்திரன் – தென்மூலை, அச்சுவேலி)
26. குழந்தை(செல்வராஜா ராஜகோபால் -பன்குடாவெளி, எருவூர்)
27. செங்கண்ணன் [தங்கன் ரகுநாதன்- கல்லிகை, நெல்லியடி]
28. வர்மன் [வெள்ளைச்சாமி ஆறுமுகம்- 9ம் கட்டை, வேலங்குளம்]
29. நாதன் [சின்னத்தம்பி யோகராசா- புதுநகரம், மல்வத்தை, அம்பாறை]
30. ஜோன் (ராசேந்திரம் உதயகுமார்- பெரிய வெளி, மூதூர்)
31. சிவபாலன் [சின்னத்தம்பி ஜெயராஜ்-விக்னேஸ்வர வீதி, சங்கானை]
32. கில்மன் [லோறன்ஸ் தனராஜ்-உப்புக்குள வீதி. ஊர்காவற்றுறை]
33. கோபு (பத்மநாதன் கோபுநாதன் - இலக்கணவத்தை, சமரபாகு, வல்வெட்டித்துறை)
34. ரமேஸ் (சின்னத்துரை சபேசன் - பெத்தாவளை, அளவெட்டி வடக்கு)
35. ராமன் (சக்திவேல் பாலகிருஷணன்- தீருவில், வல்வெட்டித்துறை)
36. ரவியன்பா [சுப்பிரமணியம் உருத்திரன் – அரிப்பு வீதி, சிலாவத்துறை, மன்னார்]
37. அங்கதன் (ஜெயத்திலக நிஸாந்தன் -குமரன்குன்றம், புளியந்தோட்டம், சுன்ணகம்]
38. நித்தியானந்தன் (சிவசிதம்பரம் சிவகுமார் – சுன்ணகம் மேற்கு, சுன்ணகம்)
39. சுபையிர் [கந்தசாமி-ராசேந்திரம், அரியாலை கிழக்கு அரியாலை]
40. யாழன் [செல்லையா-ரவி, இலுப்பைக்குளம், வவுனியா]
41. அறிவொழி [கணேஷ்-சுபாகரன், இரத்தினபுரம், கிளிநொச்சி]
42. சுதா [அர்ஜுன்-மகேந்திரன், கண்டி றோட், திருமலை]
43. கீர்த்தி [சிவகுரு-ரவிச்சந்திரன், L. V. 6-ம் கலனி, திருமலை]
44. பாரதி (சின்னத்தம்பி-நந்தகுமார், 154-ம் கட்டை, செல்வபுரம், முல்லைத்தீவு)
45. விமல் (கதிர்காமப்போடி-குகதாஸ், 9-ம் வாட், தபாற்கந்தோரடி, கொக்கட்டிச்சோலை]
46. விசித்திரன் (நிச்சிக்கர்-வல்லிபுரநாதன், தட்டாங்குளம் றோட் மீசாலை வடக்கு]
47. டயஸ் [ஜஸ்ரின் றேய்-வெவியன், ஊர்காவற்றுறை]
48. செல்லகுட்டி (வீரகத்தி-ரவிச்சந்திரன், நெல்லயடி, கரவெட்டி]
49. ஸ்ராலின் (செல்வராசா–தியாகராசா, அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை)
50. விஜி (சின்னப்பு - சிவராஜினி, செல்வபுரம், உரும்பிராய்)
51. கோகிலா (குணநாயகம்-மங்கையர்திலகம், 19, கண்ணையபுரம், திருமலை)
52. சுரேந்தினி (பொன்னையா-அமராவதி, செந்தூர் வீதி, திரியாய்)
53. மேகன் [ஆறுமுகம் - அரசரட்ணம், வெருகல், மூதூர், திருமலை]
54. சீலன் (குட்டி தெய்வேந்திரம் - 8-ம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு]
55. நெல்சன் (கோபாலசுந்தரேசன் - கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர்]
56. மிராண்டா [வீரபுத்திரன் சுரேந்திரன் - பன்குளம், திருகோணமலை]
57. அலெக்ஸ் [அழகு சத்தியசீலன் - 53, கடற்கரைவீதி, குருநகர்)

[தொடரும்]


## ஆண் தாதியாளர் தேவை

தனியார் நிறுவனமொன்றில் தாதியாக பணிபுரிவதற்கும், நோயாளர்களைப் பராமரிப்பதற்கும் தாதிகள் தேவை.

★ வயதெல்லை 30 வயதுக்கு மேல்.
★ புதிதாக சேர்பவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும்.
★ நியாயமான ஊதியம் வழங்கப்படும்.
★ உடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

முகவரி:

'பாலம்'
பொதுப்பணி தொடர்பகம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ-1459)



## பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனம்

## Patrician Institutes

### அகில உலக கெயார் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயார் ஸ்தாபனத்துடன் (Care International) இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சித் தகைமை:-
15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
8-ம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்.

பயிற்சிக் காலம்:-
2½ மாதம் ஸ்தாபன பயிற்சி.
10 மாதம் பயிலுநர் வேலையாளர் பயிற்சி.

கொடுப்பனவு:-
ஸ்தாபன பயிற்சியின்போது மாதம் 600/-ம், 10 மாத பயிலுநர் பயிற்சியின்போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

சான்றிதழ்:-
பயிற்சி நிலைய பயிற்சி சான்றிதழ், தொழில் பரீட்சை அடிப்படையில் தேசிய (அரசாங்க) தொழில் சான்றிதழ், சர்வதேச ரீதியிலான கெயார் ஸ்தாபன சான்றிதழ்.

இதர உதவிகள்:-
பயிற்சி முடிந்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளைத் தொடங்க கெயார் ஸ்தாபனத்தின் மூலம் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பங்கள்:-
பதிவாளர், பற்றீஸியன் தொழிற் பயிற்சி நிறுவனம், 59, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 02-08-91க்குப் பிந்தாமல் நேரில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

பதிவாளர்,
பற்றீஷியன் தொழில் நிறுவனம்.
(ஏ-1455)


## இன்று

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் வெற்றிக்கு ஆசி வேண்டியும், மரணித்த போராளிகளின் ஆத்ம சாந்திக்குமாக இன்று 26-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8-00 மணிக்கு கொக்குவில் ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயத்தில் விசேஷ சங்காபிஷேகம் நடைபெறும்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்திலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் பாடசாலைகளிலும் பணியாற்றும் பணியாட்களுக்கான பயிற்சி நெறி இன்று 26-ம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 8-30 மணிக்கு கல்வி அதிபதி தலைமையில் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின்விடுதலைக்காக போராடிவரும் போராளிகளின் வெற்றிக்காக கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் இன்று 26-ம் திகதி வெள்ளிக்கிழமை விசேட அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறஉள்ளன. (56)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

3-ம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு எதிர்வரும் 29-ம் திகதி நடைபெறவிருப்பதால் இப்பயிற்சி நெறியை பெற விரும்புவோர் இன்று வெள்ளிக்கிழமை 26ம் திகதி தங்கள் பெயர்களை யாழ். கல்வித் திணைக்களத்தில் மாவட்ட முகாமைத்துவ நிலையத்தில் பதிவுசெய்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.


## யாழ்ப்பாண மாநகர சபை

யாழ்ப்பாண மாநகர சபையின்

### தற்காலிக பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபையில் பின்வரும் பதவிகளை தற்காலிக அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொது சுகாதாரப் பரிசோதகர்கள் [P. H. I.] [தற்காலிகம்]
[02] பொது சுகாதார சாரணிகள் [P. H. N.] [தற்காலிகம்]
[03] குடும்ப நல சேவையாளர் [மருத்துவ மாதுக்கள்] P. H. M. [தற்காலிகம்]
[04] நூலக உதவியாளர் [தற்காலிகம்]
[05] வேலை மேற்பார்வையாளர்கள் [தற்காலிகம்]
[06] தொழிலாளர்கள் [வீதி வேலை] [தற்காலிகம்]

மேற்படி பதவிக்குரிய தகைமைகளுட்பட சகல விபரங்களையும் நல்லூர் பண்டாரமாளிகை வளவிலுள்ள மாநகரசபை அலுவலகத்திலும், கச்சேரிக்கு அண்மையிலிருக்கும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலும், சுண்டுக்குளி, நாச்சிமார் கோவிலடி கிளை நூலகங்களிலும், நல்லூர் இந்துவிடுதியிலுள்ள விளம்பரப்பலகையிலும் அலுவலகநேரங்களில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 05-08-1991

மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
24-07-91. (எ 1460)

★ தமிழ்நாட்டில் அமைதி ஏற்பட

# இலங்கைத் தமிழர் ஒவ்வொருவரும் திருப்பி அனுப்பப்படவேண்டும்! - வாழப்பாடி

(சென்னை)

"தமிழ் நாட்டில் மீண்டும் அமைதி ஏற்படவேண்டுமாகில் இலங்கைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் திருப்பி அனுப்பப்படவேண்டும்".

இவ்வாறு மத்திய தொழில் இணையமைச்சர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்

சென்னையில் நடைபெற்ற காமராஜர் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்,

அவர்மேலும் கூறியதாவது:

இலங்கை அகதிகள் குறித்து நான் அவர்களுக்காக அனுதாபப்படுகிறேன். ஆனால் போராளிகளைப் பிரித்துப் பார்க்க முடியாத நிலையிருப்பதால் அவர்களைத் திருப்பி அனுப்பத்தான் வேண்டும்.

தமிழ்நாட்டு மக்கள் இலங்கைப் போராளிகளுக்குப் பல வருடங்களாக ஆதரவளித்தது உண்மை. ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது

திரு. ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் பலர் குரல் கொடுக்கிறார்கள். அவர்கள் குற்றவாளிகளை பாராட்ட விரும்பினால் அதை யாழ்ப்பாணத்தில் செய்யட்டும். இங்கே அது முடியாது,

இன்று தமிழ்நாட்டில் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கான அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதனால் மாநில, மத்திய அரசுகள் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் மீண்டும் அமைதி ஏற்படவேண்டுமாகில் இலங்கைத் தமிழர்கள் ஒவ்வொருவரும் திருப்பி இலங்கைக்கு அனுப்பப்படவேண்டும். (பூ)

## உணவு வகைகள்

[பருத்தித்துறை]

ஆனையிறவு ஸ்ரீலங்கா இராணுவ முகாமைத் தகர்க்கும் போரில் ஈடுபட்டுள்ள விடுதலைப் போராளிகளுக்கு வேண்டிய உணவுவகைகளை வடமராட்சிப் பகுதி மக்கள் தத்தமது சிற்றூரவைகள் மூலம் அனுப்பிவைத்து வருகின்றனர்.

போராளிகளுக்கு வேண்டிய உணவு வகைகளை வழங்குவதற்கு இப்பகுதி மக்கள் முண்டியடித்துக்கொண்டு முன் வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [52)

## உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பிரப்பன்குளம் மகாமாரி அம்மன் கோ[illegible] வருடாந்த உற்சவம், [illegible] மாதம் 29ந் திகதி திங்[illegible] கிழமை காலை 10-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அடுத்த மாதம் 11ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00மணிக்கு ரதோற்சவமும், 12ந் திகதி காலை 9-00 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

★ மதுரை குண்டு வெடிப்பு

# ரெலோ, தி.மு.க. உறுப்பினர் இருவருக்கு ஆயுள்தண்டனை!

(சென்னை)

மதுரையில் 1986ஆம்ஆண்டு நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஈடுபட்ட இலங்கையைச் சேர்ந்த ரெலோ உறுப்பினர் ஒருவருக்கும் தி. மு. க. வைச் சேர்ந்த மற்றொருவருக்கும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ரெலோ அமைப்பைச்சேர்ந்த கார்த்திகேசுவுக்கும், தி. மு. க. வைச் சேர்ந்த ஜெயபெருமாளுக்குமே மதுரை நீதிபதி ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

1986 நவம்பரில் மதுரை அழகப்பன் நகர் ரயில்வே கடவையில் நடந்த குண்டு வெடிப்புக்கும், அதே வருடம் டிசம்பர் மாதம் மதுரையில் ஒரு தபால் நிலையத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டு பலர் காயமடைந்தசம்பவங்களிலும் முறையே இவ்விருவரும் ஈடுபட்டதாக மாநில குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. (பூ)

## ஆனையிறவுப் போரில் வெற்றிவேண்டிபிரார்த்தனை

[வட்டுக்கோட்டை)

ஆனையிறவு இராணுவமுகாமைக் கைப்பற்றும் நோக்குடன் விடுதலைப்புலிகளினால் நடாத்தப்படும் வீரப்போரில் வெற்றிபெறவும் இப்போரில் வீரமரணமடைந்த போராளிகளின் ஆன்மா சாந்தி பெறவும் காயமடைந்த போராளிகள் சுகமடையவும் வேண்டுதல்செய்து வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள் வ[illegible] கோட்டை வீரபத்திர[illegible] கோவிலில் கடந்த செவ்வா[illegible] கிழமை அபிஷேகம், விசேட பூசை, பிரார்த்தனை நடாத்தினர்.

இப்பிரார்த்தனையில் வட்டு பிளவத்தை அ. மி. த. கலவன் பாடசாலை, வட்டு. சுப்பிரமணிய வித்தியாசாலை, வட்டு கார்த்திகேய வித்தியாசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர். (139)

★ காவிரி ஆற்றுநீர்ப் பிரச்னை:

## நடுவர் தீர்ப்பை ரத்துச் செய்யக்கோரி கர்நாடகத்தில் இன்று ஹர்த்தால்!

(சென்னை)

காவிரி ஆற்றுநீரை தமிழ் நாட்டுக்கு திறந்து விடுமாறு நடுவர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அமுலாக்கக்கோரி தமிழ்நாட்டில் ஹர்த்தாலும், அத்தீர்ப்பை ரத்துச்செய்யக் கோரி கர்நாடக மாநிலத்தில் எதிர்ப்பு ஹர்த்தாலும் இன்று அனுஷ்டிககப்படுகின்றன.

இந்த இரு மாநிலங்களுக்கிடையிலான காவிரி நீர்ப் பிரச்னை மத்திய அரசுக்கு தர்மசங்கடமான நிலையை உருவாக்கியுள்ளது.

காவிரி நீர்வள பிரச்னையில் தமிழ் நாட்டு அரசின் நிலையை ஆதரித்து புதுச்சேரியும் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கிறது.

தமிழ்நாடு அரசு இன்று பொதுவிடுமுறையாக அறிவித்துள்ளது.

இதனால் திணைக்களங்களும், வங்கிகளும்: தனியார் நிறுவனங்களும், இன்றைய தினம் மூடப்பட்டிருக்கும்.

புகையிரத மற்றும் பஸ் போக்குவரத்துக்களும் மாற்றியமைக்கப்பட்டும் ரத்துச்செய்யப்பட்டுமுள்ளன. (பூ)

## இடம்பெயர்ந்தோருக்கு தொண்டர் நிறுவனங்கள் நிவாரண உதவி

(புலோலி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மருதங்கேணி தொடக்கம் கட்டைக்காடு வரையிலான கிராமங்களிலிருந்து அயல் கிராமங்களான செம்பியன்பற்று, நாகர் கோவில், அம்பன், குடத்தனை ஆகிய கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தோருக்கு தொண்டர் நிறுவனங்கள் நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், கியூடெக், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பனவே இந்நிவாரண உதவிகளை வழங்கிவருகின்றன.

இவற்றில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்: கிளை, இடம்பெயர்ந்த 1600 குடும்பங்களுக்கு போதுமான உலர் உணவுப் பொருட்களை நிவாரணமாக வழங்கியுள்ளது. (61)

## போராளிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் போர்க்களத்திலும் மற்றும் களங்களிலும் போரிடும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கு வேண்டிய உணவுவகைகளை வழங்குவதில் வன்னிப்பகுதி மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

போர்க்களத்தில் காயமடையும் போராளிகளுக்கு உதவி புரிவதிலும் வீரமரணமடையும் மாவீரர்களின் இறுதிச் சடங்குகளிலும் வன்னிப்பகுதி மக்கள் பெருமளவில் கலந்து கொள்கின்றனர். (க)

## இராசி பலன்

26-07-1991

(தமிழ் திகதி [ஆடி 10)

வெள்ளிக்கிழமை

பூரணை நள்ளிரவு 12-05 வரை, உத்தராடம் பின் இரவு 1-36 வரை, கரி நாள், ராகுகாலம் காலை 10-32 முதல் 12-02 வரை. சுபநேரம், அதிகாலை 6-02 முதல் 7-32 வரை, பூரணை விரதம்.

மேடம்: செல்வந்தர் நட்பு தொழில் சிறப்பு குடும்ப சுகம்

இடபம்: கடமை தவறுதல், குடும்ப சிக்கல், யோசனை

மிதுனம்: பங்காளி தொல்லை மன வெறுப்பு, பணமுடை.

கடகம்: தொழில் லாபம், பெரியோர் ஆசி. பண வரவு.

சிங்கம்; காரிய வெற்றி, தாயார் அன்பு, பொதுப் பணி

கன்னி: குழப்பமடைதல், வேண்டாத தொல்லை, அசதி.

துலாம்: அஞ்ஞான வாசம் மனத்தில் பயம், அவசர முடிவு.

விருச்சிகம்: பகைவர் தொல்லை, கல்வி ஞானம், பயணம்.

தனுசு: ஆசாரமின்மை, தொழில் குறைபாடு.

மகரம்: நண்பர் உதவி புதிய முதலீடு, சுப காரியம்.

கும்பம்: ஏமாற்றம், அதிகாரிகள் சினம், கடன் சுமை.

மீனம்; வியாபார மேன்மை உறவினர் வருகை, மனக் களிப்பு.

- ஜோஸ்யர்

ஆனையிறவு யுத்தம்:

## ஆசிரியர் மாணவர் அணி பங்களிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவமுகாம் தகர்ப்பதற்கு தங்களால் இயன்ற பங்களிப்பை நல்க மாணவர்கள், ஆசிரியர்கள், தனியார் கல்விநிறுவன இயக்குனர்கள் முழுமனதோடு விருப்பம் தெரிவிததுள்ளனர்.

இவர்களின் பெரியதொரு அணி நேற்றுகாலை பளை சென்றடைந்துள்ளது. இவர்கள் போர்மையங்களில் பதுங்குகுழி வெட்டல், மண்மூடை நிரப்புதல், காயப்பட்ட போராளிகளுக்கு முதலுதவி வழங்கல் போன்ற சேவைகளை ஐந்து தினங்களுக்கு செய்வர். ஒவ்வொரு அணியும் ஐந்து தினங்களுக்கு சேவைசெய்யும். (எஸ்)

## தங்கம்கடத்திய பெண்கைது

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து தங்கம் கடத்தி வந்த இந்தியப் பெண் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதாகும் வேளை கடத்திவந்த தங்கத்தை விழுங்கிக் கொண்டார்.

இவருக்கு பேதி மருந்து கொடுக்கப்பட்டு 240 கிறும் தங்கம்எடுக்கப்பட்டது. இதன் பெறுமதி ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவாகுய. (பூ)

★ ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை

# பதுக்கி, விலைகூட்டி விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றம்!

## வர்த்தக சங்கம் எச்சரிக்கை

(உடுவில்)

போர்க்கால சூழ்நிலையில் பொருள்களை பதுககல் செய்வதோ, பொருள்களின் விலைகளைக் கூட்டி விற்பதோ தண்டனைக்குரிய செயல்களாகும் இவ்வாறான சமூகவிரோதச் செயல்களில் வர்த்தகர் ஈடுபடுவது கண்டுபிடிக்கப்பட்டால் கடும்நடவடிக்கைஎடுக்கப்படும்

சுன்னாகம் பிரதேச வர்த்தகர் சங்கம் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது;

அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

நாட்டில் இன்று நடைபெறும் போர் நடவடிக்கைகளைக் காரணம் காட்டி ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை பதுக்கல் செய்வதன்மூலம் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தவும், அதன் மூலம் பொருள்களின் விலைகளை அதிகரிக்கவும் வர்த்தகர்கள் முயலக்கூடாது. ஏற்கனவே பொருளாதாரத் தடைகளால் நொந்துபோயிருக்கும் தமிழ் மக்கள் மீது மேலும் பொருளாதாரச் சுமையை ஏற்றி அவர்களை[illegible] சாகடிக்க முயலக்கூடா[illegible] எமது சங்கத்தின் இவ்வேண்டுகோளைப் புறக்கணித்து, பொருள்களைப் பதுக்கல் செய்வோர், விலைகளைககூட்டி விற்போர் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க சங்கம் தயங்க மாட்டாது. (109]

★ காவிரி நீர்ப்பிரச்னை

# பதவிகளை துறக்க போவதாக அ.தி.மு.க.-காங்கிரஸ் மிரட்டல்

(சென்னை)

இந்திய லோக சபையில் தமது பதவிகளை ராஜிஞமாச் செய்யப்போவதாக தமிழக இ. காங்கிரஸ், அ. இ. அ. தி. மு. க. உறுப்பினர்கள் மத்திய அரசுக்கு எச்சரிக்கை செய்துள்ளனர்.

காவிரி நதி நீரை தமிழகத்திற்கு வழங்குமாறு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மத்திய அரசு அமுலாக்கவேண்டும் இல்லாவிடில் தாம் தங்கள் எம். பி. பதவிகளை உடனடியாக ராஜிஞமாச் செய்யப்போவதாக அந்த இரு கட்சிகளும் இந்தியப் பிரதமருக்கு மகஜர் ஒன்றையனுப்பியுள்ளனர்.

இதே வேளை நீதிமன்றத் தீர்ப்புக்கு ஆதரவாக தமிழகம், புதுச்சேரியிலும் எதிராக கர்நாடகத்திலும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதும் தெரிந்ததே. (சி-க)

# கொக்கட்டிச்சோலை படுகொலைவிசாரணை

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலை படுகொலை தொடர்பான விசாரணைகள் இம்மாதம் 29ம், 30ம் 31ம் திகதிகளில் மட்டு நகரில் நடைபெறவுள்ளத.

ஜனதிபதி பிரேமதாஸாவினல் இக்கொலை தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவினுல் இவ்விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு செயலாளர் ஓ. எல். எம். செனிவிரத்ன செய்துள்ளார்.

# இனப்பிரச்சனை தீரும் வரை அகதிகளை அனுப்பக்கூடாது

(சென்னை)

இலங்கைத் தமிழர் தொடர்பான பிரச்னை நிரந்தரமாக தீர்க்கப்படும்வரை தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களை இலங்கைக்கு திருப்பியனுப்பக்கூடாது.''

இவ்வாறு இலங்கை-இந்திய நட்புறவு சங்க பிரமுகரும் உயர்நீதிமன்ற நீதியரசருமான வீ. ஆர். கிருஷ்ணஐயர் தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; தமிழகத்திலிருந்து தாயகம்திரும்பும் தமிழ் அகதிகளின் நலன்களை பாதுகாக்க இலங்கையரசு தயாராக இல்லையென்றும் பல லட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியா வருகின்றனர் என்றும் எனவே ஈழத்தமிழர் பிரச்னை நிரந்தரமாக தீர்க்கப்படும்வரை அகதிகளைத் திருப்பியனுப்புவது சாத்தியப்படாது என்றும் தெரிவித்துள்ளார். (க)

# 3-ம் தவணைக்கு பரீட்சைகள் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் 2-ஆம் தவணை வரையிலான பாடத்திட்டங்கள் பூரணப்படுத்தாதநிலைமை இருப்பதால் இரண்டாம் தவணைப் பரீட்சையை மூன்றும் தவணைக்காகப் பாடசாலைகள் ஆரம்பிக்கும்வரை பின்போடுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சில பாடசாலைகள் இப்பரீட்சையைத் தொடக்கியிருப்பினும் தற்காலிகமாக நிறுத்தி மூன்றும் தவணை ஆரம்பத்திலேயே தொடரவேண்டுமெனவும் மறு அறிவித்தல்வரை பாடசாலைகளைத் தொடர்ந்தும் வழமைபோல் நடத்துதல்வேண்டும் என்றும் யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

காயமடைந்த போராளிகளை பராமரிப்பது தொடர்பாகவும், மற்றும் உதவிகள் செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடலொன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தில் இன்று பி. ப. 2.30 மணிக்கு நடைபெறும். நிறுவன மாணவர்கள் அனைவரையும் தவருது சமூகம்கொடுக்குமாறு நிறுவன மன்றத்தினர் கோருகின்றனர்.

## கலந்துரையாடல் ரத்து

(யாழ்ப்பாணம்)

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். அரச செயலகத்தில் நடைபெறவிருந்த ப நோ. கூ. சங்கங்களில் நெல் கொள்வனவு சம்பந்தமான கலந்துரையாடல் நடைபெறமாட்டாது என யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அரச அதிபரின் அனுசரணையுடன் அறிவித்துள்ளார்.

### தரையிறங்கிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் கடந்த மாதம் நடுப்பகுதியில்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஒருஹெலி பின் விமானத்தாக்குதலில் முற்ருக அழிக்கப்பட்டதும்தெரிந்ததே. (சி)

### தமிழ் இளைஞர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர்களைக் கைது செய்து பொலிஸ்நிலையத்தில்அடைத்து வைத்துத் தீவிர விசாரணைகள் நடத்தி வருகின்றனர்.

வெளிநாடு செல்வதற்கும், மற்றும் தேவைகளின்பொருட்டும் பல நாட்களாக விடுதிகளில் தங்கிநிற்கும இளைஞர்களில் பலர் பல தடவைகள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்படும் இளைஞர்கள் சில நாட்கள் தடுத்துவைக்கப்பட்டபின் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்படுகிருர்கள்.

பொலிசாரின் தொடர்ச்சியான துன்புறுத்தலினுல் கொழும்பில் தங்கிநிற்கும் வடபகுதி இளைஞர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ள கொழும்பிலிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

### 2 கப்பல்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறைக்கு வந்துள்ளன.

யாழ். அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகரின் அவசர வேண்டுகோளுக்கு இணங்க உணவுப்பொருட்களை ஏற்றிக் கொண்டு ''லில்லி'' கப்பல் நேற்று மாலை 7 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

இன்று காலை வந்து சேரவுள்ள ''குமண'' கப்பலில் உணவுப் பொருட்கள், மருந்து வகைகள் ஒய்லூதிய வவுச்சர்கள் என்பனவும் வருவதாகவும் கூறப்படுகின்றது.

உணவுப் பொருட்கள் காலை ஆறுமணி முதல் இரவு எட்டுமணி வரையும் துரித கெதியில் இறக்கப்படவிருக்கிறது.

இதற்கான அனுமதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரிடமிருந்து கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### கரும்புலிகளுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மீது மேற்கொண்ட தற்கொலைப்படைத் தாக்குதல்களை குறிப்பிட்ட இவர் இது படையினருக்கு பெரும் பிரச்னையாக இருப்பதாகவும் கூறினுர்.

மேலும் புலிகளின் விமான எதிர்ப்பு பீரங்கிகளைத் தேடி விமானங்கள் தீவிர ரோந்தில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (சி-153)

### கட்டைக்காடு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போர் அரசுக்கு பெரும் கௌரவப் பிரச்னையாக இருப்பதால் படைகளின் முயற்சியை முறியடிக்க புலிகள் தங்களின் முழுப் பலத்தையும் பிரயோகிக்கக்கூடுமென்றும் அச்செய்திகள் தெரிவித்தன. (சி)

### பற்பசை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பளிப்புச் செய்யுமாறுஅரசு அறிவித்துள்ளது.

இராணுவ முகாம்களிலோ அல்லது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலோ ஒப்படைக்கும்படியும் அரசுநேற்று வானெலிமூலம் அறிவித்துள்ளது. (வி)

### க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டத்தில் வைத்து விநியோகிக்கப்படும்.''

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இன்னும் இரண்டொரு தினங்களில்இப்பரீட்சைக்கான எழுது கருவிகள், விடைத்தாள்கள் யாழ். கல்வித்திணைக்களத்துக்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (152)

### 131 படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவர் மேலும் தெரிவிக்கையில்; பயங்கர கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதனுல் ஆனையிறவுநோக்கிச் செல்லும் படையினர் மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்தார்.

ஆனையிறவு முகாமை சுற்றி புலிகளின்நிலைகள்மீது தொடர்ந்தும் கடும் குண்டுத்தாக்குதல் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (சி-153)

### போர் எப்போது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினுர்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:- வடபுலத்தில் புலிகளுடன் அரச படையினர் கடுமையாக போரிடவேண்டியுள்ளது.

ஆனையிறவில் சிக்கியுள்ள படையினரை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் முகாமைச் சுற்றி வளைத்துச் செல்லவேண்டியிருக்கிறது.

இராணுவத்துக்குத் தேவையான பொருள்களை வழங்கும் வழிவகைகளை உறுதிப்படுத்திக்கொண்டே முகாமை நோக்கி முன்னேறவேண்டும்.

### பல காவலரண்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதல் நண்பகல் 2 மணிக்கு ஆரம்பமானது. காவலரண்கள் முற்ருகதகர்ந்த போது அவற்றிலிருந்த படையினர் பலர் கொல்லப்பட்டிருக்கலாமென தெரியவருகிறது.

### புலிகளுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு வேண்டப்படுகின்றனர்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை அறிய விரும்புகின்ற மக்கள் ஜோண்டாவிலிலுள்ள மாவட்ட அலுவலக பொறுப்பாளரை காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12மணி வரையும் சந்தித்து அறிந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

இதேவேளை தமிழீழப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போராளிகளுக்கு உறுதுணையாக செயற்பட துணைப் படை ஒன்றை அமைக்க விடுதலைப்புலிகள் தீர்மானித்துள்ளனர்.

இப்படையில் இணைய விரும்புபவர்கள் இன்று மாலை 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கு வரும் படியும் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

### அரசியல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வளிக்கும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களைக்கொண்ட தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளதாகவும், வடக்கு. கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணுமுகமாக பாராளுமன்ற சபாநாயகர் திரு. எம். எச். மொகமட் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதுடன் இப்பேச்சுவார்த்தை குறித்துஅரசும் சபை உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளது.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

### பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை

13-06-91 இல் காலஞ்சென்ற எமது சகோதரர் வேலணை மேற்கூர் பண்டிதர் ச. சிதம்பரப்பிள்ளை அவர்களின் அந்தியேட்டி 26-07-91 காலை 5.00 மணியளவில் கொழும்புத்துறை துண்டியிலும், வீட்டுக்கிருத்தியம் அன்னரின் இறுதிக்கிரியைகள் நிகழ்ந்த கொழும்புத்துறை இல்லத்திலும் நிகழும். இவ்விரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுமாறு உற்ருர், உறவினர், அன்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்ரேம்

வணக்கம்

உடன் பிறந்தார் - குடும்பத்தார்

71/2, நவநீதன் ஒழுங்கை,
புங்கம்குளம் வீதி,
கொழும்புத்துறை.

[சி 5031]



## மலிவு விற்பனை

காஸ்குக்கர்கள், பிளான்டர் & மிக்சிகள், சுவர்க்கடிகாரங்கள், மின்சார குக்கர்கள், அயன், ரேற்றில்கள், தையல் மெசின்கள், மின்சார விசிறிகள். வேறும் பல வீட்டுப்பாவனைப் பொருட்கள் யாவும் உடனடியாக மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு

### ஜெயா ஏலவிற்பனை பகுதி,

நவநீதம்

161, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-1457)



## நகரசபைகள், பிரதேச சபைகள், சனசமூக நிலையங்கள்

நகரசபைகள், பிரதேச சபைகள் ஆகியவற்றைச் சேர்ந்த சகல ஊழியர்களையும் சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுவினர்களையும் எனது காரியாலய ஊழியர்களையும் 27-07-91 (சனிக்கிழமை) அன்று காலை 10-00 மணிக்கு என்னை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சு. டிவகலாலா

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

[எ-1458]


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180336/81